# பொதுக்காலம் 8ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! பொதுக்காலத்தின் எட்டாம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் அனைவரையும் உளங்கனிந்த அன்புடன் வரவேற்கிறோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் எப்படிப்பட்டவர்கள் என நம்மையே நாம் கேட்டுப் பார்க்க இயேசு அழைக்கிறார். நமது வாழ்வில் பல செயல்களை நாம் இறைவனுக்கு எதிராகவே செய்து கொண்டு இருக்கிறோம். அத்தகைய சூழலில் நாம் செய்கின்ற தவறுகளை தவறாகவே ஏற்றுக் கொள்வதில்லை, அவற்றை விட்டு விலகவும் துணிவதில்லை. இதனாலேயே பிறருடைய குற்றங்களை எப்போதுமே மிகைப்படுத்திக் கடுமையாக விமர்சனம் செய்கின்றோம். "தீர்ப்பிடாதே, தீர்ப்புக்குள்ளாவாய்" என்கின்றார் இயேசு. ஏனெனில் பிறரைக் கண்காணிக்கவோ, குறை கூறவோ நமக்கு உரிமை அளித்தவர் யார்? முதலில் நம் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து விட்டால் அதன்பின் மற்றவர் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க கண் நன்றாக தெரியும். தனது குற்றங்களை மறைத்து மற்றவர்களைக் குறைகூறும் மனிதர்களும் ஒரு விதத்தில் மனநோயாளிகளே!

உலக வாழ்க்கையானது முகம் காட்டும் கண்ணாடி போன்றது. நமது செயல்கள் சிறந்தவையாக இருந்தால்தான் கண்ணில் காணும் அனைத்தும் சிறந்ததாகத் தோன்றும். நம்மை நாம் குறைநிறைகளோடு ஏற்றுக்கொண்டால்தான் பிறரையும் நன்கு புரிந்து கொள்ள முடியும். தன்னை முழுமையாய் ஏற்றுக் கொண்டு வாழ்பவரே சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும். பிறருக்கும் பாவ இருளை நீக்கி ஒளியான வாழ்வு வாழ வழி காட்ட முடியும். முதலில் நம்மைத் திருத்துவோம். பின்பு மற்றவர்கள் திருந்த வழி காட்டுவோம். அதற்கான நல்மனம் வேண்டி இத்திருப்பலியில் இறைவனிடம் வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

மனிதர்களுடைய பேச்சுக்கள்தான் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. சல்லடையில் சலிக்கின்ற போது உமி தங்கி விடுவது போல மனிதரின் பேச்சில் மாசு படிந்து விடுகின்றது என்று கூறும் சீராக்கின் ஞான நூல் நாம் பேசுவதற்கு முன்பு நம்மையே சோதித்துப் பார்க்க வேண்டும் என்று கூறுவதைக் கவணமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தின் வழியாக சாவு என்பது நமக்கு அழிவு அல்ல. அது கிறிஸ்துவோடு இணைந்து நாம் வாழ்வதற்கான ஒரு வழியாகும். ஆகவே நாம் கடவுளுக்கு நன்றி சொல்வோம். உறுதியாய் இருந்து இயேசுவில் நிலைத்து நிற்போம். இறுதி நாளில் சாவை வெற்றி கொண்டு இயேசுவைப் போல உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையில் வாசகத்திற்குக் கவனமுடன் செவிமெடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நன்மைகளின் நாயகரே எம் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நீர் எப்போதும் உடன் இருந்து வழிநடத்துகின்றீர், உமது இரக்கம் எப்போதும் எங்களுக்கு உண்டு என்ற நம்பிக்கையில் உம்மை உறுதியாக பற்றிக் கொள்ள வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 பரிவுள்ளம். கொண்டவரே எம் இறைவா! எங்களது வாழ்வில் தூய ஆவியின் கனிகளை நாங்கள் முழுமையாக நம்பி எங்களது செயல்களின் மூலமாக பிறருக்கு பரிவு காட்டுபவர்களாகவும் நிறை உண்மையை நோக்கி எங்கள் வாழ்வினை அமைத்துக் கொள்பவர்களாகவும் திகழ்ந்திட வரம்தர வேண்டுமெண்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எங்களுக்குப் புகலிடமான இறைவா! எங்கள் குடும்பங்களிலும் சமுதாயத்திலும் பல துறைகளில் பொறுப்பில் உள்ளவர்களும் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக இல்லாமல் அனைவரையும் உள்ளன்போடு சகோதர சகோதரிகளாக ஏற்றுக் கொண்டு நல்ல கனிதரும் மரங்களாகத் திகழ்ந்திட வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தேடி வந்தோரைக் கைவிடாத தெய்வமே! நோயினாலும் முதுமையினாலும் தனிமையாலும் தவிக்கும் உள்ளங்களைக் கண்ணோக்கிப் பாரும். உம் ஆவியினால் அவர்களை நிரப்பி, ஒளியின் மக்களாக தேர்ந்து ஆறுதலாகவும் தேற்றுபவர்களாகவும் இருக்கக்கூடிய நல் உள்ளங்களைத் தந்துத் தாங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா. சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com